1992 மார்ச் 11]

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் ஆட்சியில் தான் தர்மபுரி மாவட்டத்திலே பென்னாகரம் தொகுதியை தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவித்து இருக்கிறார்கள். அதற்கு எங்களது இதயபூர்வமான நன்றி. இன்று வரை எந்தத் தொழிற்சாலையும் இல்லாத ஒரு தொகுதி, மக்களுக்கு வேலை வாய்ப்புக் கூட இல்லாத மிகவும் புறக்கணிக்கப்பட்ட அந்த தொகுதியில் 1981–82-ல் தர்மபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்த மண் வளம், நீர் வளம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு, இடமும் தேர்வு செய்யப்பட்டு, ஆனால் 1983-லே ஊத்தங்கரைக்கு எந்தவிதக் காரணமும் இன்றி அந்த நூற்பாலையைக் கொண்டு சென்றுவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும், திருப்பூர் பனியன் ஓசியரி நூலுக்கு அதிக தேவை இருக்கிறது. வெளி நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. அன்னியச் செலாவணியும் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது. வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட ஓசியரி நூல்கள், 25 ஆயிரம் கதிர்கள் கொண்ட கூட்டுறவு நூற்பாலையை தமிழ்நாட்டிலே முதலாவதாக எனது தொகுதியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரையில் தர்மபுரி கூட்டுறவு நூற்பாலை 25 ஆயிரம் கதிர்களோடு செயல்பட்டு வருகிறது. தவிர மிகவிரைவில் 22 கோடி ரூபாய் செலவில் நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, தாயுள்ளம் கொண்ட தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தாயாரான அன்னை சந்தியா அவர்கள் பெயரால் பர்கூரில் முழுமையாக பெண்களையே கொண்ட ஒரு நூற்பாலையை உருவாக்க இருக்கிறோம். அது உங்களுடைய மாவட்டத்தில் வருகிறது. அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

168— முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 168. திரு. ம. தனபால். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,

கோவளம் மேம்பாலம் சீர்செய்தல்.

*230 திரு. ம. தனபால் :

[1992 மார்ச் 11

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவான்மியூர் முட்டுக்காடு சாலையையும், பழைய மகாபலிபுரம் சாலையையும் இணைக்கும் கோவளம் மேம்பாலம் பல ஆண்டுகளாக பழுதடைந்து சீர் செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை உடனடியாக சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பாலத்தை புதுப்பித்துக் கட்டும் பணி அரசு பரிந்துரை செய்யப்பட்டு 1991-92 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டது. அதற்கு பின்னால் இந்தப் பாலத்தைத் திரும்பக் கட்டுவதற்கு ஏறத்தாழ ரூபாய் 90 இலட்சம் செலவு இருக்கிற காரணத்தால் நிதிநிலை நெருக்கடி காரணமாக இந்தத் திட்டம் தற்சமயம் கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவளத்தையும் கேளம்பாக்கத்தையும் இணைக்கிற அந்தப் பாலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாலம். கடற்கரை ஓரத்தில் புதிய மகாபலிபுரம் சாலையில் இருக்கிற கிட்டத்தட்ட 25 கிராமங்களையும், அதிலேயிருந்து அந்தப் பாலத்திற்கு மேற்கே வருகிறபோது பல நகரங்களையும் இணைக்கிற மிக முக்கியமான பாலம். ஏற்கெனவே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் 68 என்ற எண்ணுள்ள பேருந்து சென்னையிலிருந்து மகாபலிபுரத்திற்கு இயங்கிக் கொண்டிருந்தது. அதைப்போல தாம்பரத்திலிருந்து கோவளத்திற்கு பல நகரப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருந்தன. அப்படிப்பட்ட ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாலம் அது. ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட ஆயிரம் வாகனங்கள் அந்தப் பாலத்தின் வழியாகச் செல்கின்றன. அது சுற்றுலாப் பயணிகளுக்கு உகந்த ஒரு பாலம். அப்படிப்பட்ட ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பாலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது பழுதடைந்த நிலையில் சரிசெய்யமுடியாமல் மூடப்பட்டது. அங்கே மூடப்பட்டது என்று அறிவிப்பு வெளியிட்ட போதிலும் இன்றைக்கு பல வாகனங்கள் அந்தப் பாலம் வழியாக கடந்து செல்கின்றன. அந்தப் பாலம் ஒரு வளைவாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது

1992 மார்ச் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தனபால் கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. ம. தனபால் : தலைவர் அவர்களே, பாலத்தின், முக்கியத்துவத்தை குறித்து சொல்கிறேன். அது விழக்கூடிய நிலையில் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரு பெரிய பிரச்சினையென்றால் அந்தப் பிரச்சினையாகத் தான் இருக்க முடியும். எனவே, எங்களையெல்லாம் வாழ வைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழகத்தின் முதல்வர் ஆட்சியில் தான் இது சரிசெய்யப்பட வேண்டுமென்ற நிலையிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. எனவே, எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியில் இந்த ஆண்டில் அல்லது அடுத்த ஆண்டிலாவது அந்தப் பாலம் சரி செய்யப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாலத்தை நானும் நேரில் பார்வையிட்டேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் என்னோடு வந்தார்கள். ஏற்கெனவே சொன்னதைப் போல் இந்த அரசுக்கு நிறைய மனம் இருக்கிறது. பல்வேறு திட்டங்கள், பல்வேறு சாலைகள், பல்வேறு பாலங்களை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று எண்ணம் இருக்கிறது. ஆனால், இருக்கிற நிதிநிலை நெருக்கடி காரணமாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, வருகிற நிதியாண்டில் இருக்கிற நிலைமைகளை பரிசீலித்து, அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 169, திரு. வே. பெரியசாமி மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

169—

அத்தாணி—அந்தியூர் சாலை அகலப்படுத்துதல்.

*841 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு பொதுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :